420

Regd. No M 878.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மக்ஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்

இவைகளைப் பரவச்செய்யும்

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

5-MAR 19

தொகுதி 9 } காளயுக்திஸ்ரீ மார்கழிமீ 1918ஸு டிசம்பர்மீ { பகுதி 8

விஷயங்கள்

1. தற்காலநிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர்; பி. ஏ. 217
2. தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள்—வி. ராமச்சந்திர நாயுடு 225
3. ஜகத்குரு ஸ்தோத்திரம்—E. V. நாராயண ஐயர் 232
4. கொழும்பு நாடார் சங்கத்தின் பொதுக் கூட்டத்துக்கு நிரூபம்.—ஸீ. ஜீனராஜ தாசர் 233
5. குரு சிஷ்ய லக்ஷணம் 237
6. பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்கு சாமி ஐயர் ... 239
7. தர்மம்.—எம். எம் நாராயணசாமி ஐயர் 244

அ. ரெங்கசாமி ஐயர் B. A., B. L. பத்திராதிபர்

தபால் சார்ஜ உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ 2
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

அடியில்கண்ட புஸ்தகங்களை நீங்கள் அவசியம் வாங்கவேண்டும்.

முத்துக்கள்!		விலைசொற்பம்!
1	ஸாக்ரடீஸ் சரித்திரம்—புரொபஸர் ரெங்காச்சாரி	0—12—0
2	விக்கிரஹாராதனை—சம்பாஷணை—கே. எஸ். ராமச்சந்திரய்யர்	0—1—0
	மீனாக்ஷிசுந்தரம்—நாடகம்-வெங்கிட்டராமய்யர்	0—6—0
4	கல்வி கற்பித்தல்—ஈஸ்வர கைங்கரியம் ...	0—8—0
5	எனது பிரதிக்ஞை	0—12—0
6	பிரஹ்மக்ஞானத்தின் விசாரத்தால் நமக்குறும் பயன் யாது	0—9—0
7	நமது பெரும் துரவஸ்தை—இது நீங்கும்வழி	0—3—0
8	கர்மநாசம்	0—3—0
9	சின்னங்கள்	0—3—0
10	ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள் ...	0—3—0
11	ஸன்மார்க்க முறையும் சம்சாரமும் ...	0—3—0
12	மோக்ஷம் அல்லது வீடுபெறல் ...	0—3—0
13	ஸ்தூல பிரபஞ்சதர்மங்கள்—ஆத்மதர்மங்கள்	0—3—0
14	என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது	0—3—0
15	மகாளயபக்ஷமும் நவராத்திரியும் ...	0—1—0
16	காயத்ரி ராமாயணம்	0—1—0
17	காயத்ரி	0—1—0
18	சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம் ...	0—2—0
19	ஹிந்து என்பவன் எவன் ...	0—1—0
20	லோககுருவின் அவதாரங்கள்... ...	0—1—0
21	புத்த சரித்திரம்	0—0—6

தபால் சார்ஜ் வேறு

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,

மதுரை

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 9	காளயுக்தி௵ மார்கழி௴ 1918௵ டிசம்பர்௴	பகுதி 8

தற்கால நிலைமை.

(192-ஆம் பக்கத் தொடர்ச்சி).

"இந்த மகாயுத்தத்தில் இருதிறத்திலும் சண்டையிடுவது மனிதர்களின் சைன்யங்களல்ல. இரண்டுவிதமான தத்துவங்களல்லவா போரிடுகின்றன? பலமே மூர்த்தீகரித்தது போல் துலங்கும் ஜர்மனிராஜ்யம் ஒரு சார்பிலிருக்கிறது. மற்றொரு சார்பில், சுதந்தரத்துடன் சகோதர பாவத்தையும், ஜனாபிமானத்தையும் பெரிதாய்க்கொண்ட பிரான்சும், எளியாரைப்பேணுவதற்காக தன் வாலிபர்களைக்கணக்கில்லாமல் சாகக்கொடுத்த பிரிடிஷ் ராஜ்யமும், தனக்கு ஒரு சிறு லாபத்தையும் கருதாமல் ஞாயம் எந்தக்கக்ஷியோ அந்தக்கக்ஷிக்கு உதவிபுரிய முன்வந்த அமெரிக்கா ஐக்கிய நாடுகளும் அணிவகுத்து நிற்கிறார்கள்" என்று சொன்னேன். பலத்தால் ஆகவேண்டிய கைங்கரியம் ஒன்றுமில்லையென்று நினைக்கலாகாது. ஜர்மனியில் ஜனங்கள் எல்லோருக்கும் கல்விகற்பித்ததும், அந்நாட்டிலிருந்து தரித்திரத்தை ஓட்டியதும், அந்நாட்டுத்தொழிலாளிகளை நிகரற்றவர்களாகச் செ

ய்ததும், பலத்தின் கைங்கரியமே. ஆனால் இக்காலத்தில் பலத்தின் மகிமை மங்கும்படி பகவத் ஆக்ஞை யேற்பட்டு விட்டது. உலகத்தில் பாகு பலத்திற்கு இனி ஓட்ட மில்லை.

***

18-ம் நூற்றாண்டில் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் ஒழுங்காக ஜன நாயகம் ஏற்பட்டதின் பிரயோஜனம் 20ம் நூற்றாண்டில் காணப்படுகின்றது. அந்நாடுகளின் அக்கிராஸனர் உலகத்தின் தலைவராகவே விளங்குகிறார். நியாயம் எது அநியாயம் எது என்று கோடாத தராசில் சீர் தூக்கவும், சுயநலம் கருதாமல் நியாயத்திற்கு உதவி செய்யவும், ஜயம் கிடைத்தாலும் தங்தேசத்திற்கென்று சுய நலத்தைக் கருதேன் என்று உறுதி கூறவும், உலகமெங்கும் சுதந்தரம், நியாயம், சகோதரபாவம் பரவவேண்டும் என்ற தீர்மானத்தை வற்புறுத்தவும், பாக்கியம் பெற்றதைவிட வேறு வெகுமதி யாது வேண்டும்.!

***

அநேகர் இச்சண்டையால் உலகமே முடிந்து நாசமாய் விடும் என்று நினைத்தார்கள். ஆனால் புராதனமான ஞானத்தை அறிந்தவர்கள் இக்கடும்போர்கள நாரதர் போன்ற ரிஷிகளின் தூண்டுதலால் நடக்கின்றன வென்றும், ஆகையால் அவை கெடுதலாய் முடியாதென்றும் அறிந்தார்கள். மேல்நாட்டு அரசாட்சி ஸபைகளில் ஸ்ரீ நாரதரிஷியானவர் ரஹஸியமாய் வேலை செய்திருக்கிறார். மாறுதலுக்கு ஏற்ற பக்குவத்தையடைந்திருந்த உலகத்தில் அவரது எண்ணமானது முற்றிலும் இத்தடவையில் நிறைவேறும் என்பது நிச்சயம். சண்டையானது நேசக்கட்சியாருக்கு விரோதமாகும் போல் தோன்றிய காலத்தும், துவக்கத்தில நேசச் சைனியங்கள் பின்னடைந்த காலத்தும் பிரஹ்மக்ஞானத்தை உண்மையாயறிந்தவனுக்கு மனதில் எத்திறத்தார் ஜயமடைவார் என்ற விஷயத்தில் சந்தேகமிருந்திருக்கமாட்டாது. நியாயம எந்தப்பக்கத்திலோ அங்கேயே ஜயம் நிச்சயம். ஏன் என்றால் போரை நடத்துகிறவர்கள் ஈசுவரனுடைய சேவகர்களல்லவா? அவர்கள் மனிதனுக்கு எது ஹிதமோ அதையே முடிப்பார்கள்.

அவர்கள் கருணாமூர்த்திகள், என்றாலும் அவர்கள் வழுவற நியாயத்தையே செலுத்துவார்கள். கடுமையான நியாயப்படி தண்டனை விதிப்பதைப் பார்த்தால் அவர்கள் கருணையில்லாதவர்கள் போல் தோன்றும். ஆனால் அப்படியல்ல. உலகத்தில் ஒருவன் தவறுசெய்தால் துன்புறுவான் என்ற நிச்சயமில்லையாகில் உலகமே நிலையற்றுப் போம். இவ்வியுத்தத்தில் உடலை நீத்தவர்கள் மறுபடி சிலாக்கியதரமான நிலைமையில் புதிய உடல்களோடு பிறப்பார்கள் என்பது நிச்சயம். ஆகையால் உலகத்தை ஆளுகிறவர்கள் உண்மையாக ரிஷிகளே. அவர்களுடைய மகிமையை இவ்வியுத்தத்தில் பார்க்கிறோம். பெருங் குழப்பத்தினின்று சகோதர பாவத்தை முதன்மையாகக் கொண்ட ஒரு புதிய நாகரீகம் ஏற்படப்போகிறது. சண்டை, போட்டி, எல்லாம் இவ்வியுத்தத்தோடு முடிவு பெறும் நாகரீகத்தைச்சேர்ந்தது.

***

சகோதர பாவமானது பிரஹ்மஞானசபையின் முதல் நோக்கமல்லவா? சகோதரத்துவமானது மனிதனால் சிருஷ்டிக்கப்படும் பொருளல்ல. அதை அழிக்கவும் ஒருவராலும் முடியாது. ஒவ்வொரு ஜீவனும் பரமாத்மாவினின்று சிதறப்பட்ட ஒரு பொறி. ஆகையால் நாம் யாவரும் சகோதரர்கள். ஆனால் நம்முடைய சகோதரபாவத்தை நாம் அறிகிறதில்லை. அதை அறியும்படி செய்வதுதான் நமது பிரஹ்மஞான சபையின் முதல் நோக்கமாம். உலகத்தில் அச்சகோதரபாவத்தை நடபடிக்கைகளில் காட்டும்படி தூண்டுவதே இச்சபையோர்களின் கடமையாகும். உலகமானது இப்போது மாறுதலை அடைந்துவருகிறது. இன்னும் பலமாறுதல்களையடையப்போகிறது. இம்மாறுதல்கள் நிகழும்போது அவை சகோதரபாவத்தை உணர்த்தக்கூடியவாறாக அமையும்படி நாம் முயலவேண்டும். நாம் இதுகாறும் தியானத்தினால் அறிந்த சகோதரத்துவத்தை இப்போது உலகிற்குப்பயன்படுமாறு காரியமாய்க்காட்டவேண்

டும். நாம் கற்றது நம்முடைய சுயப்பிரயோஜனத்திற்காகவன்று, உலகசேவைக்காகவேயாம். இராஜரீகவிஷயமாயினும், ஆசாரசீர்திருத்த விஷயமாயினும், கல்வி கற்பிக்கும் விஷயமாயினும், எவ்விஷயத்தில் திருத்தங்களவசியமோ இருள் சூழ்ந்து வெளிச்சம் தேவையாக இருக்கிறதோ, ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களோ, அங்கெல்லாம் பிரஹ்மக் ஞானி சென்று சேவை செய்யச் சித்தமாயிருக்கக்கடவன். இதுதான் சமயம். இப்போது வைவசுவதமனுவானவர் உலகத்தில் நடைபெறும் சகலமாறுதல்களையும் நேரில் கவனித்து நடத்திக்கொண்டிருக்கிறார். அவர் இந்திய சரீரத்தைத் தாங்கி நிற்கிறார். அவரே உலகமெங்கும் பரவியிருக்கும் ஆரிய ஜாதிக்கு மனுவென்பதை யறியுங்கள். அவரும் அவருடைய பணியைச்செய்யும் ரிஷிகளும் மனிதர்களைக் கருவிகளாகக்கொண்டு வேலைசெய்து வருகிறார்கள். நம்மால் செய்யக்கூடியது சொற்பம். நம்முடைய பலமும் ஞானமும் சொற்பம். ஆனால் அவர்களுடைய பலமும், ஞானமும் பூர்ணமானது. அவர்களுடைய சக்தியானது நம்முடைய வழியாக பிரவகிக்கும்படி பாக்கியம் பெற்றால் அதுவே நாம் அடையக்கூடிய பரமலாபம். அப்படி அடையவேண்டுமென்ற ஆசைதான் தீவிரமாக நமக்குண்டாகவேண்டும். அப்படி ஆசையுள்ளவர்கள் எல்லாம் பிரஹ்மக்ஞான சபையைச்சேரட்டும். ஆனால் அதைச்சேருவோர்கள் கஷ்டப்படவும் சேனைக்குமுன் செல்லவும் அடிபடவும் சித்தமாயிருக்கவேண்டும். ஒரு காட்டை நாடாக்கின பிறகு அங்குச்சென்று யாவரும் வசிக்கலாகும். ஆனால் காட்டைவெட்டிச்செப்பனிடும்போது அவர்கள் என்ன என்ன கஷ்டப்படவேண்டும்? அம்மாதிரி பிரஹ்மக் ஞான சபையைச்சேருகிறவர்கள் முதற்கொள்ளும் அபிப்பிராயங்களை உலகம் பல வருஷங்களுக்குப்பிறகு ஆதரிக்கும். முதற்கண் பிரஹ்மக்ஞானியை உலகம் பரிசிக்கும். முதலில் சிரமமான காரியங்களில் அவன் பிரவேசித்து நடத்தவேண்டும். அதனை அப்போது தடுத்துப்பிற்பாடு கொண்டா

டுவார்கள். இது உலகத்தின் இயல்பு. இவர்களுடைய துன்பமே உலகத்தின் இன்பமாகமாறும். இதற்கு சித்தமாயிருப்பவர்கள் எல்லாம் வாருங்கள் வந்துசேருங்கள்." இவ்வாறு கூறி முடித்தார்கள்.

***

1918ஆம் வருஷத்தின் இறுதியில் வழக்கம்போல் தேசவாரமானது கொண்டாடப்பெற்றது. ஹிந்துக்கள் சக்கரவர்த்திகளாயிருந்தபோதும், மகம்மதியர் சக்கரவர்த்திகளாயிருந்தபோதும், எந்நகரமானது தலைநகரமாக விளங்கிற்றோ, எந்நகரத்தை இந்திரப்பிரஸ்தம் என்று ஹிந்துக்களும், டில்லி என்று அனைவரும் அன்புடன் அழைப்பார்களோ அந்நகரத்தில் இந்த சமயத்தில், இந்தியாவின் க்ஷேமத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் உழைத்து வரும் ஒவ்வொரு பொதுஜனக் கூட்டமும் கூடிற்று. சென்ற சில வருஷங்களாக அனுசரிக்கப்படும் வழக்கப்பிரகாரம் நமது பிரஹ்மக்ஞான சபையின் வருஷோற்சவமும் அந்நகரத்தில் கொண்டாடப்பெற்றது.

***

யுத்தம் முடிந்துவிட்டது. சமாதான ஏற்பாடுகள் இனி நிகழப்போகின்றன. இரண்டுக்கும் மத்தியகாலமானசந்தியா காலத்தில், இயற்கையாகவே, இனிவரப்லபோகும் சமாதான காலத்தில் மேதாவிகளின் பரிசீலனையை எதிர்பார்த்து நிற்கும் விஷயங்கள் யாவை என்ற கேள்வியானது மனத்து எழுகின்றது. அதற்கு ஏற்ப, மாது ஸ்ரீ நமது அக்கிராசனருடைய இந்த வருஷத்து "கன்வென்ஷன்" உபந்யாசமானது இவ்விஷயத்தைப் பொறுத்தே நிகழ்கின்றது. யுத்தக் குழப்பத்திற்குப் பிறகு உலகத்தில் புதிய மாறுதல்கள் ஏற்படப் போகின்றனவென்பது திண்ணம். பிரஹ்மக்ஞானப் பயிற்சியினால் அம்மாறுதல்கள் உலகத்துக்கு மிகுந்த க்ஷேமகரமாகவிருக்கும் பொருட்டு அவைகளைப் பற்றி சிந்தனை செய்யவும் மேதாவிகள் பரிசீலனை செய்யவும் வேண்டியது அவசியம். ஜன

ஸமூகம், மதம், ராஜீய சீர்திருத்தம் இவ்விஷயங்களில் அவ்விதப் பிரதி கிருஷ்டியைப்பற்றி அம்மையவர்கள் உபந்யசித்தார்கள். ஸ்ரீமான் வி. ஜினராஜ தாஸர் அவர்கள் சகோதர பாவத்தைப்பற்றியுபன்யசித்தார்கள். 28-ஆம் தேதி உதயதிசை நக்ஷத்திர சங்க வருஷக் கூட்டம் நிகழ்ந்தது அவ்வமயம் ஸ்ரீமான் வி. ஜினராஜ தாஸரும் ஸ்ரீமான் ஜார்ஜ் அருண்டேலும் லோககுருவின் வரவைப்பற்றி உபந்யாசம் செய்தார்கள்.

***

"தேசியக்கல்வி" விஷயமாயும் வருஷோற்சவம் நடந்தது. அதற்குச் சம்மந்தமாக ஒரு காட்சிச் சாலையானது ஏற்படுத்தப்பட்டது. தேசியக்கல்விச் சாலைகளில் மாணாக்கர்களால் செய்யப்பட்ட சாமான்களை எல்லாம் சேர்ந்து அழகாய் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்ததாம். நமது சிறுவர்கள் யுக்தியிலும் புத்தியிலும் கைப்பழக்கத்திலும் மிகவும் தேர்ந்தவர்கள் என்பதையும், சிறிது பழக்கமிருந்தால் மிகவும் அந்தமும் நுட்பமுமான சாமான்களையும் செய்யக்கூடும் என்பதையும், இக்காட்சியானது தெற்றெனப் புலப்படுத்தியது. அநேகமாக அங்கே வைக்கப்பட்ட பொருள்களைக்குறிப்பிட்ட விலைக்கு உடனே வியாபாரிகள் எடுத்துக்கொண்டார்கள் என்று அறிய ஆனந்திக்கிறோம். "பாய்ஸ்கௌட்"கள் காட்சிச் சாலையை ஒழுங்காய் பார்த்துக்கொண்டிருந்ததாயும், அவர்கள் வந்தவர்களை வரவேற்றுவேண்டிய இடங்களுக்குக் கூட்டிப்போய்க் கொண்டிருந்ததாகவும் தெரியவருகின்றது. தேசியக்கல்வி முயற்சியால் செவ்வையாய்த்திருத்திச் செப்பனிடப்பட்ட காட்சிப் பொருள்கள் யாவற்றிலும் யாவர் மனத்தையும் கவரக்கூடிய முதன்மையான காட்சிப் பொருள் மேற்கூறிய பாய்ஸ்கௌட்களே யென்று ஒரு நிருபர் கூறுகிறார்.

***

மாது ஸ்ரீ பெஸண்டம்மையவர்கள் பன்னிரண்டாம் தடவை அக்கிராசனராக உலகத்துள்ள பிரஹ்மஞான

சபைகளின் வருஷக்கூட்டத்தில் உபந்யாசம் செய்தார்கள் பிரஹ்மஞான சபையானது ஸ்தாபிக்கப்பட்டு இது 43-வது வருஷமாகும் வருஷ சப்தகங்களாக 6 சப்தகங்கள் சென்றுவிட்டன. ஏழாவது சப்தகத்தின் முதல்வருஷமிது. உலக யுத்தத்தின் முடிவு இவ்வருஷத்தில் ஏற்பட்டது. பிந்திய 6 வருஷங்களில் மாறுதல்களின் குழப்பத்தைப் பார்ப்போம். இனி உபயோகமற்ற பழைய கட்டடமானது இடிக்கப்பட்டுவிட்டது. இனி வரும் 6 வருஷ காலத்தில் இடிக்கப்பட்ட இடத்தை சமதளமாக்கி இனி ஏற்படப்போகும் புதிய நாகரீகமாகும் கட்டடத்திற்கு ஏற்றபடி செப்பனிடப்படும். அப்புதிய நாகரீகத்தை ஸ்தாபிக்கும் மகானுபாவர்தான போதிஸத்வா மைத்திரேயர். சென்ற 6 ஸப்தகங்களாக நாம் பிரஹ்மஞானத்தின் பயிற்சியினால் கற்றுக்கொண்டதை இனி உலகஸேவைக்காக நாம் உபயோகிக்கவேண்டும். புதிய கட்டடத்தை நிர்மாணம் செய்வதற்கு வேண்டிய சிற்பர்களை நம்முடைய பிரஹ்மஞான சபை தான் கொடுக்கமுடியும்.

***

பிரஹ்மஞான சபை அங்கத்தினர் அநேகர் இந்த யுத்தத்தில் சேர்ந்து யுத்த வீரர்களாக கியாதியடைந்திருக்கின்றனர். அநேகர் யுத்தத்தில் உடல் நீத்து வானுலகு சென்றனர். ஆகையால் சபைக்கே உயர் பெருமை வாய்த்திருக்கின்றது. அமெரிக்காவில் ஜன சமூகச் சீர்திருத்தத்திற்காகவே ஒரு சபை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவெல்லாம் நம் சபையார் தம் பொறுப்பை உணருகிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

***

இந்தியாவிலும் மற்ற தேசங்களிலும் புதிய கிளைச் சபைகளும் புதிய அங்கத்தினர்களும் சேர்ந்துவருவது சந்தோஷகரமானசெய்தி. இந்தியாவில் கைதிகளுக்கு நற்புத்தி கூறுவதற்காக சில அங்கத்தினர் உழைத்து வருகின்றனர். தீண்டாச்சாதியாரை உயர்த்துவதற்காக இந்தியக் கிளைச்

சபைகள் முயன்று வருகின்றன. ஸ்திரீகள் அநேகமாக அங்கத்தினர்களாய்ச் சேர்ந்து வருகிறார்கள். இந்தியாவின் முன்னேற்றத்தில் பெண்மணிகளும் தங்களால் செய்யவேண்டிய முயற்சிகளை வரவர அதிகமாய்ச் செய்து வருகிறார்கள். இவையாவும் போற்றத்தகுந்தவைகளே.

மதுரையில் பொதுஜனங்களுக்குப் பேருபகாரமாக ஹைகோர்ட்டு வக்கீல் பிரஹ்ம ஸ்ரீ நடேசையரவர்கள் கிருஹத்தில் கீதை உபந்யாசம் நடந்து வருகின்றது ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடத்தை அலங்கரித்து சிறிதுகாலத்துக்கு முன் பிரஹ்மபூதர்களான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ஹ பாரதீஸ்வாமிகளின் சிஷ்யர்களும் ஸ்ரீ காசியிலிருந்து இங்கு விஜயம் செய்திருப்பவர்களுமான ஸ்ரீ பிரக்ஞானனந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் தினந்தோறும் மாலை 7-மணி முதல் 8-மணி வரை பகவத்கீதையை ஆரம்ப முதல் உபந்யாசமாக நடத்திவருகிறார்கள். நாளுக்கு நாள் சிரவணம் செய்கிறவர்களுடைய சங்கியை அதிகரித்து வருகின்றது. பிராஹ்மணர்கள், பிராஹ்மண இதரர்கள், ஸ்திரீகள், உத்யோகஸ்தர்கள், வைதீகர்கள் யாவரும் வெகு சிரத்தையாய் தினந்தோறும் தவறாமல் வந்து கேட்டு ஆனந்திக்கிறார்கள். ஸ்வாமிகளது யாவரும் உஜ்ஜீவிக்கவேண்டும் என்ற கருணையும், குழந்தையும் அறியும்படி விளக்கிக்கூறும் தெளிவும், முயற்சியில்லாமல் இடைவிடாது பிரவஹிக்கும் வாக்பிரவாஹமும், மதத்துவேஷமற்ற சமரஸபாவமும் மன உருக்கமும், திருஷ்டாந்தங்களின் பொருத்தமும் ஜனங்களுடைய மனத்தை காந்தம் போல் இழுக்கின்றன. சுவாமிகளுடைய பேருபகாரத்திற்கு ஜனங்கள் யாது கைம்மாறு செய்ய இயலும்? அவர்களைக் கேட்கும்படியான பாக்கியத்தை மதுரைக்குக் கொடுத்த ஸ்ரீ நடேசையர் அவர்கள் பரம உபகாரி யென்று மதுரையே வாழ்த்துகின்றது.

ஆர். ரெங்கசுவாமி ஐயர்

தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள்.

(200-ம் பக்கத் தொடர்ச்சி)

---

(2) மரண பயத்தை நிவர்த்திக்கும். ஒரு ஊரில் இரண்டு சிநேகிதர்கள் இருந்தார்களென்பதாகப் பாவிப்போம். ஒருவனுடைய தாய் ஒன்றும் தெரியாத முட்டாள். பிரபஞ்ச விஷயம் அதிகமாய்த் தெரியாமல் கேவலம் வீட்டு வேலைகளில் மாத்திரம் தெரிந்து நடத்துகிறவளென்பதாகப் பாவிப்போம். மற்றொருவனுடைய தாய் நல்ல வித்தையுடையவள், பிரபஞ்ச ஞானத்தை அறிந்தவள், தேச தேசாந்தரங்களின் விஷயமும் அறிந்தவள் என்பதாகப் பாவிப்போம். இந்த இரண்டு சிநேகிதர்கள் தூர தேசத்திற்குச்சென்று அங்கு வியாபார உத்யோகங்களாலே சுகமாய் அபிவிருத்தி அடைந்து கொண்டிருந்தார்கள். முதல் பேர்வழியின் தாய் மூன்று வேளைகளும் துக்கித்துக்கொண்டு, ஐயோ! மகன் தேசாந்தரத்தை அடைந்தானல்லவா, அங்கு அவன் கதி என்னமோ! என்ன ஆச்சுதோ என்பதாகச் சிந்தித்துக்கொண்டு அன்ன பானாதிகளை விட்டொழித்து மெலிந்து போனாள். இரண்டாவது பேர்வழியின் தாயென்றாலோ, அத்தேசத்தின் சங்கதி தெரிந்தவளானபடியால் தன் மகன் அங்கு எவ்வளவு சுகமாயிருக்கிறானென்பதை அறிந்து அவனுக்குக் கடிதங்கள் அனுப்பிக்கொண்டும் அவனிடமிருந்து க்ஷேமலாபங்களைத் தெரிந்து கொண்டும் சந்தோஷமாக இருந்தாள்.

இது உலகத்தில் எவ்வளவு ஸஹஜமோ, அவ்விதமே மரணமென்பது தேசாந்தர யாத்திரைக்குச் சமானமென்பதாகச் சொல்லக்கூடும். இறத்தல் எனின் இந்த உலகத்தைவிட்டு இன்னோர் உலகத்திற்குப் போதல் என்று அர்த்தம். ஒருகதியைவிட்டு வேறொரு கதிக்குப்போன விதம். மேல் சட்டையான இச்சரீரத்தை விட்டு வேறொரு சட்டை

யான சூக்ஷ்ம சரீரத்தோடு சூக்ஷ்ம லோகத்தில் வியவகரிக்கும் அவர் எங்கும் போகவில்லை, இங்கேயே இருப்பாரென அறியின் மரணபீதி விட்டுப்போதல் ஸஹஜமல்லவா ?

மேலும் அந்த உலக ஞானமுள்ளவர்கள் வந்து அவ்விடத்து விஷயத்தை நமக்குச் சொன்னால் எவ்வளவு தைரியமும் ஸந்தோஷமும் உண்டாகும் ? நாம் கூட அவ்விடத்துச் சங்கதியைப் பிரத்யக்ஷமாக இங்கிருக்கும்பொழுதே தெரிந்துகொள்வதற்குச் சக்தியை அடையும் மார்க்கத்தைக் காட்டுபவர்களிருக்கும் பக்ஷத்தில் இன்னும் எவ்வளவு துக்கம் நாசமாகி ஸந்தோஷாபிவிருத்தி அடைவதற்கு அவகாசமிருக்குய ? தியாஸபி இவ்வித விஷயங்களையெல்லாம் இருக்கிறதென்பதாக அறிவித்து துக்கத்தைப் பரிஹாரம் செய்யும்.

(3) ரோகம், ஏழைத்தன்மை இவைகளின் கஷ்டங்களைக் குறைக்கும். ரோகத்தால் பிடிக்கப்பட்ட சரீரத்தை உடைய ஸாமான்ய ஜனங்கள் எங்களுக்கு இவ்வித சரீரம் ஏற்பட்டதே யென்பதாக துக்கிப்பது போல் தியாஸபி அறிந்தவன் துக்கியான். ஏனெனில், பூர்வம் சரீரத்தை கிரமமாகக் காப்பாற்றாது கெடுத்தமையால் இப்பொழுது இவ்வித வேலைக்குப பயன்படாத சரீரத்தில் பிறக்கவேண்டி வந்தமையால் சென்றதைப் பற்றி வருத்தப்பட அவசியமில்லை. இப்பொழுதாகினும் விவேகத்தை அடைந்து இப்பொழுது கிடைத்த சரீர விஷயத்தில் ஜாக்கிரதையுண்டாகி கவனித்துக்கொண்டு வந்தால் இனி நல்ல சரீரம் வருவதற்கு ஹேதுவாகுமென்பதாக அறிந்து இப்பொழுதுள்ள சரீரத்தின் ரோக துர்ப்பலங்களைப் போக்கடிக்க முயற்சிப்பான், தான் செய்த பிரயத்தனம் வியர்த்தமாகாது என்ற நிச்சயம் அவனுக்கிருக்கும். முயலும்பொழுதெல்லாம் சக்தி அதிகரிக்கும் என்பதாகவும் அந்த சக்தி எவ்விதமும் வீணாகாமல் இனியெப்பொழுதும் தன்னுடன் கூட தன்னுடையதாக இருக்குமென்றும் தெரியும். அவற்

ருல் இப்பொழுதுள்ள கெட்ட ஸ்திதியைப் பார்த்து எப் பொழுதும் சிந்தித்துக்கொண்டு வேறு வேலையை கவனி யாது இராமல் தைரியத்தோடு விவேகத்தால் வேலை செய்து இப்பொழுதே அந்த தோஷங்களைப் புருஷப் பிரயத்தனத் தால் வெண்டிய அளவு போக்கடித்துக் கொள்வான். இனி அவ்வித தோஷங்கள் ஏற்படாதிருக்க முயற்சித்துக்கொ ண்டிருப்பான். ஏழைத் தன்மை வரினும் பிரஹ்மக்ஞான விசாரணை செய்தவன் இவ்விதமே பிரயத்தனம் செய்து இப்போதைய எளிமையைப் போக்கடித்துக் கொள்வான். அல்லது குறைத்தாவதுகொள்வான். இனிமேல் ஏழ்மைத் தனம் வராமல் செய்துகொள்வான். ஒருவேளை ஏழ்மையி ருக்கினும் அவற்றை லட்சியம்பண்ணாது சகித்துக்கொண்டு தைரியத்தோடும் உத்ஸாஹத்தோடும் உலகஸேவையைச் செய்ய அருகனாயிருப்பான். ஏழ்மைக்குக்காரணம் என்னவென்பதாகத் தேடி அக்காரணத்தைப் போக்கடிப்ப தற்கு யத்தனிப்பான். இப்போதைய ஏழ்மைக்குப் பூர் வம் என்னகாரணமிருந்ததென்பதை அறிந்துகொள்வான். இப்பொழுது அவற்றை நிவர்த்திப்பதற்குச் செய்யும் பிர யத்தனங்கள் தாத்காலிக பலத்தைக்கொடுக்கக் கூடியதாய் இராவிடினும் எப்பொழுதும் பலனில்லாது போகாது என் பதை அறிவான். ஆகையால் நிர்ப்பயமாக ஸந்தோஷசித்தத் தோடு வேலைசெய்து கொண்டிருப்பான்.

4. தியாஸபி இடைஞ்சல்கள், விபத்துக்கள், அபஜய ங்கள் முதலாயுள்ளவைகளில் தைரியத்தைக் கொடுக்கும். தான் மேற்கொண்ட காரியத்தில் இடையூறுகள் வரினும், அபஜயமானாலும் தியாஸபியைப் படித்தவன் பயப்படான். ஏனெனில், இந்த இடையூறுகள் பூர்வம்தானே செய்து கொண்டதென்பதாகத் தெரிந்திருக்கும். மேலும் அவை கள் உண்மையாய் யோசிக்கின் அபகாரிகளன்று உபகாரிக ளே என்பதாக நினைப்பான். சக்தி விருத்தியாகுமென்று லென்ன? சமர்த்தனென்றாலென்ன? இடையூறுகள் சக பவித்து வந்த இடையூறுகளை ஜயிக்கும் சக்தி இருந்து

அவைகளை ஜயித்தாலல்லவா சக்தியுடையவனாவன்? பேடித் தன்மையுள்ளவன் ஆபத்தில் நிற்கான். விபத்து சம்பவிக்கின் அவ்விடத்தினின்று தப்பித்துக்கொள்வதற்கு என்ன செய்யவேண்டுமென்பதாக யோசித்து உடனே அதை நிவர்த்திக்கும் மார்க்கத்தை அறியக்கூடிய சாந்தி, சக்திகளை அடைந்திருக்கவேண்டும். பயம் மனதை அல்லோல கல்லோலப்படுத்தும். ஆகையால் பயமானது நிஷ்பிரயோஜனமுள்ளதென்பதாகத்தெரியும். இதுவுமன்றி அதனால் அபாயமும் நஷ்டமும் உண்டாகுமென்பதாகக் கூடத்தெரியும். ஆபத்துக்கள் தைரியத்தை விருத்தி செய்வதற்கு வரும் உபகாரியென்பதாக அறிவான். மேலும் அவை பூர்வம் தான் செய்த கர்மபலனென்பதாகவும், அவை சாசுவதமாயிராமல் சிறிது காலமிருந்து போகக்கூடியதென்பதாகவும், தான் செய்யும் பிரயத்தனங்கள் சாசுவதமானவைகளென்பதாகவும் தெரியும். அபஜயங்களால் ஸாமான்யர்களைப் போல் பிரஹ்மக்ஞானப்பாஸி பின் வாங்கான். ஏனெனில் நிச்சயமாகத் தான் பகவத் கார்யத்தைச் செய்பவனானால் அதற்கு அபஜயமேது? தான் அபஜயமென்று பாவித்தலே ஜயமென்பதாக எண்ணுவான். இதுவுமன்றி அபஜயமெனின் ஜயத்தை அடைகலுக்கு எவ்வளவு சக்தி, சாமர்த்தியம் வேண்டுமோ அவ்வளவு தனக்கில்லையென்பதாக அறிவான். அழுதால் அவை வருமா? பிரயத்தனப்பட்டு சம்பாதிக்கின் அவை வரும். ஆகையால் அபஜயத்திற்குப் பயப்படாமல் ஒவ்வொரு அபஜயமும் கூட ஜயமுண்டாவதற்குப் படியென்பதாகவும் அனேக அபஜயங்களின் பலமே ஜயமென்பதாகவும் தெரிந்திருப்பதால் பிரஹ்மக்ஞானத்தினின்று உண்டாகும் இந்த விவேகத்தால் இடையூறு, விபத்து, அபஜயங்களுக்கு பீதியை அடையாமல் தைரியம், உறுதி, சந்தோஷங்களோடு வேலை செய்வான்.

கஷ்டங்கள் ஸம்பவித்தபொழுது இதரர்களுக்குத் தான் இவைகளை உண்டுபண்ணின சமயத்தில் அவர்களுக்

கெவ்வளவு ஹிம்சை, துக்கம், பிரதிகூலங்கள் ஏற்பட்டன வென்பது தெரியாததால் அவை தனக்குப் பிராப்தமாகி இதரர்கள் எவ்விதம் கஷ்டப்படுவார்களென்ற அனுபவம் தனக்கு வந்தமையால் ஞானத்தை அடைந்து இனி இவ் வித கஷ்டங்களை இதரர்களுக்கு உண்டுபண்ணமாட்டான். மேலும் இதரர்கள் அவர்களை விட மற்றவர்களுக்கு கஷ்டநஷ்டங்கள் உண்டுபண்ணும் பொழுது அவைகளை நிவர்த்திக்க ஸஹாயம் பண்ணுவதற்கு யத்தனிப்பான்.

தனக்கு ஞானம் விசேஷமாக இல்லாதிருந்தால், முந்தி அதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்யவில்லை யென்பதாக அறிந்து, இப்பொழுது பிரயத்தனம் செய்யவேண்டுமென்ற விவேகத்தையும் உத்ஸாஹத்தையும் பிரஹ்மக்ஞான முண்டு பண்ணும். இதுவுமன்றி நான் இதரர்களுக்கு ஞானத்தை விருத்தி செய்வதற்குக் கிருஷிபண்ணும்போதெல்லாம், தனது அஞ்ஞானம் குறையுமென்பதாகக் காட்டும். இவை முதலான அனேக விதங்களாக தியாஸபி மனிதர்களின் துக்கங்களைக் குறைத்து முடிவில் துக்க நாசத்தைச் செய்யும்.

பலச்சுருக்கம்.

1. மனிதனுடைய உத்பத்தி, வளர்தல், மானிட ஜன்மத்தின் உத்தேசம், கர்த்தவ்யம், இவைகளை நன்றாய்த் தெளிவுபடுத்தி அனுமானங்களைப் போக்கடிக்கும்.

2. ஜனங்களிடத்துள்ள பரஸ்பர மதத்வேஷம், ஜாதித்வேஷம், குலத்வேஷம், முதலாயுள்ள த்வேஷபாவங்களைப் போக்கிபரஸ்பர ஸகோதர சினேகத்தையும் வாஞ்சையையும் விருத்தி செய்யும்.

3. வெளிவேஷங்களைப் பார்த்து இதரர்களிடம் தோஷங்களை மாத்திரம் தேடுவதை ஒழித்து இதரர்களிடமுள்ள ஸத்குணங்களைத் தேடும்படியாய்ச் செய்து சினேகிதர்களை விருத்திப்படுத்தும்,

4. மனிதனுடைய ஸ்வரூபம், ஸ்வபாவம், லக்ஷணம், சக்தி முதலியவைகளைத் தெரிவித்து, அவைகளைச் சுத்தி செய்யும் கிரமம், வளர்க்கும் வழி, நியமம், சாமர்த்தியம், முதலியவைகளை விருத்தி செய்யும் மார்க்கங்களைக் காட்டி மானச சக்தியை ஒழுங்குபடுத்துவதற்கும் அதிகப்படுத்துவதற்கும் சகாயத்தைப் பண்ணும்.

5 பகவான் சுந்தரமூர்த்தியென்பதாகவும் அவர் சிருஷ்டியில் எவ்வளவு சௌந்தர்யமிருக்கிறதென்பதையும், அந்த அழகை அறிந்து சந்தோஷிக்கும்சக்தி மனிதனிடம் அடங்கியிருக்கிறதென்பதாகவும, எவ்விதம் முயற்சித்து அந்த திவ்ய சௌந்தர்யத்தை கிரஹித்து சாமர்த்தியத்தை விருத்தி செய்துகொள்ளக் கூடுமென்ற விஷயத்தையும் தெளிவாகக்காட்டும்.

6. பிரபஞ்சத்தில் தென்படும் இத்தனை வித்தியாசங்களுக்கும், அன்யாயம், நிஷ்காரணங்களென்று புலப்படும் விஷயங்களுக்கும், எவ்விதம் சரியான காரணங்களும், அதிக உத்தமமானப் பிரயோஜனங்களும் உண்டோ அந்த விஷயங்களையெல்லாம் காட்டி ஈசுவரனுடைய மஹிமையை வியக்தப்படுத்தும்.

7. தன் ஒருவனுடைய சுகம் உண்மையான சுகமன்று, எல்லோருடைய சுகமே தன்சுகமென்பதாகப் பிரகாசிக்கப்பண்ணும்.

8. பிரபஞ்சம் நாயகனற்றதன்று, ஸர்வசக்திமயனும் ஞானதயா பூரணனுமான ஈசுவரனும், அவர் கிங்கரர்களான தேவர்களும், மஹரிஷிகளும் உலகத்தைப் பரிபாலித்துக்கொண்டு, உலக அபிவிருத்திக்காக வேலை செய்துகொண்டிருக்கிறார்களென்பதாகவும் அவற்காக ஈசுவரனின் சித்தானுஸாரம் வேலை செய்பவர்களுக்கு எப்பொழுதும் அவர் அனுக்கிரஹத்தை வர்ஷித்துக் கொண்டிருப்பாரென்பதாகவும் தெரியப்படுத்தும்.

9. ஈசுவராம்சனும் சாசுவதனுமான ஜீவன் தான் என்றும் இந்த தேஹம் தன்னுடையதென்றும் இந்த தேஹம்போனால் தான் போவதில்லை என்றும் விஷயத்தைக் காட்டி மரண பயத்தைப் போக்கடிக்கும். மேலும் நாம் வசிக்கும் உலகங்களின் ஞானத்தை இவ்விடமே பிரயத்தனத்தால் அடையலாமென்றும், அவ்வித லோகாந்தர ஞானத்தை உடையவர்கள் நம்முடன் கூட இப்பொழுது இவ்விடம் இருக்கிறார்களென்பதாகவும் திருடமாகச் சொல்லும்.

10. ரோகம், ஏழ்மை, இடையூறுகள், ஆபத்து, அபஜயம் கஷ்டம், அஞ்ஞானம், இவைகளுக்குக் காரணங்களைக் காட்டி அவைகளைப் பரிகரிக்கும் உபாயத்தையும் ஒரு வேளை அவைகளிருக்கினும் அவைகளை தைரியமான சகித்தலோடு பொறுத்துக்கொள்ளும் வழியையும் காட்டி மனிதனுடைய துக்கத்தைக் குறைத்து சுக சந்தோஷங்களை விருத்தி செய்யும்.

இவை முதலாயுள்ள மார்க்கங்களை விசாரித்து அனுஷ்டிப்பவனுக்குப் பரம சகாயத்தைப் பண்ணும்.

ஓம் தத் ஸத்.

வி. ராமச்சந்திர நாயுடு.

ஸ்ரீனிவாஸ ராவ் அவர்கள் தெலுங்கு திவ்ய ஞானதிபிகையில் எழுதியுள்ள வியாஸத்தினின்று பூர்ணசந்திரோதயத்திற்காக ஏனங்குடி வி. ஆர். நாயுடுவால் மொழி பெயர்க்கப்பட்டது.

ஜகத்குரு ஸ்தோத்திரம்.

(ராகம்-ஆரபி: தாளம்-ஆதி: தேவாரமெட்டு.)

1. உலகமெலாம் நலமிகவே ஓங்கும்பல மதங்களுக்கும்
தலைவ,வெள்ளை யம்பலத்தின் தூயவனும் நாயகனே
நிலவுலகி லினியுமிப்போ நீயிறங்க வெதிர்பார்க்கும்
பலவிதமாம் மனிதருக்கும் பரிந்துதவி புரிந்திடுவாய்.

சற்குருவே யருளுருவே சகலருக்கும் வான்தருவே
சற்குருவே நின்வரவே (நாம்) சகலரும்செய் தவவுருவே

2. சண்டையிடும் ஜனங்களினிச் சமர்புரியும் வினைநீங்க
விண்டிடுவாய் சாந்தியினை மேதினியில் மேலாகக்
கொண்டுசகோ தரத்துவத்தைக் கொடும்போரைவிடும்
(படிசெய்
தண்டியனை வரும்நாமொன் றென்றறிய வருளுவாயே

(சற்குருவே * * *)

3. வந்திடுக நின்னன்பாம் வலியுடனே வந்திடுக
வந்திடுக நின்சத்தாம் மாட்சியுடன் வந்திடுக
அந்தரர்க்கும் மனிதருக்கும் மாசிரிய ஞானவனே
உந்தனது திருவரவா லுலகமெலாம் காப்பாயே.

(சற்குருவே * * *)

4. கொள்ளை கொள்ளும் போரழிய குவலயத்தி லருள்
(பொழிய
பிள்ளையிடம் தாய்போன்ற பெருங்கருணை மேகமதாய்
கிள்ளைமொழி கிளத்ததுபோல் கிளர்சாந்தி பகர்ந்திடவே
வெள்ளையம்ப லத்தருளே விரைவாய்நீ வருவாயே.

(சற்குருவே * * *)

E. V. நாராயண ஐயர். F. T. S.
தமிழ்ப்பண்டிதர், மஹாராஜா காலேஜ், திருவனந்தபுரம்

கொழும்பு நாடார் சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்கு ஸ்ரீமான் ஸி. ஜினராஜ தாஸர் அவர்கள்எழுதி அனுப்பிய நிருபம்

பிரியமுள்ள சகோதரர்களே!

உங்களுடைய சங்கம் ஊக்கத்துடன் வேலைசெய்து நாளுக்கு நாள் விருத்தியாக வேண்டுமென்பது என்னுடைய பிரார்த்தனை. இம் மாதம் 12-ந்தேதி நடக்கப் போகிற ஜனரல் மீட்டிங்கில் இத்துடன் நான் அனுப்பும் வியாசத்தைப் படிக்கும்படியாய்க் கோருகிறேன்.

சென்ற மே மாதத்தில் என் பாரியையும் நானும் தலைச்சேரியில் ராமுணியவர்களைப் பார்த்துச் சந்தோஷமடைந்தோம். மூன்று வாரங்களுக்குமுன் நான் கொச்சியில் பிரயாணஞ் செய்தபோது மகா-ா-ா-ஸ்ரீ கோவிந்தரையும் உங்களினத்தாரின் கனம் சுவாமியாரையும் சந்தித்து ஆனந்தத்தை அடைந்தேன். அப்போது அவர்கள் சிலோனிலிருந்து திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்கள். சுவாமியார் தான் கொழும்பில் சில பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்திருக்கிறதாகச் சொன்னார்.

இந்தியாவில் வசிக்கிற மேல் ஜாதியார் உங்களினத்தார் விஷயமாகக் கொண்டிருக்கிற அபிப்பிராயம் எனக்குத் தெரியும். ஆனால் இப்போது கொஞ்சகாலமாக அந்த அபிப்பிராயம் மாறிக்கொண்டு வருகிறது. கல்விகற்ற அனேகர் தங்கள் தப்பெண்ணங்களை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் விருத்தியாவதற்கு இரண்டு கட்சிகள் முயற்சி செய்யவேண்டும். முதலாவது உங்களினத்தார் கல்வி விஷயமாய்ச் சிரத்தையெடுத்துக்கொண்டும், உங்கள் மரியாதையைக் காப்பாற்றிக்கொண்டும், பொது நன்மைக்காக ஒவ்வொருமனிதனும் ஒவ்வொரு ஸ்திரீயும் உழைத்துக்

கொண்டுவரவேண்டும். ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, பெண் பிள்ளைகளுக்கும் கல்வி கற்பிக்கவேண்டும். நீங்கள் அடிக்கடி சங்கம் கூடிக் கஷ்ட காலங்களில் ஒருவர்க்கொருவர் சகாயஞ்செய்துகொள்வதுந் தவிர நன்மையையும் சிலர் மாத்திரமல்லாமல் எல்லாரும் ஒன்றுகூடி அனுபவிக்கவேண்டும். உங்களினத்தாரிலேயே சகோதர பாவத்தை விருத்திசெய்யவேண்டும். ஆங்காங்கு சங்கங்கள், புஸ்தகசாலைகள், சேர்ந்து படிப்பதற்கும் சந்தோஷமாய்க் காலம் கழிப்பதற்கும் தகுந்த கிரகங்கள், பஜனைகள், கண்காட்சிச் சபைகள், மனிதர்களும் ஸ்திரீகளும் அடிக்கடி சந்தித்துச் சுயேச்சையாய்த் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கத் தகுந்த மற்ற சாதனங்கள் இவைகளையும் ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். நாங்களும் எங்களால் கூடியவரையில் ஜாதி பேதமில்லாமலும் ஏழைகள் பணக்காரர்களென்கிற பேதமில்லாமலும் நம் மாதாவாகிய இந்தியாவில் பிறந்த பிரஜைகள் எல்லோரும் சகோதரபாவத்தையடையும்படி எல்லா பிரயத்தனங்களையும் செய்கிறோம்.

உங்களுக்கு யாராகிலும் அநீதியாய் நடந்துகொண்டால் நீங்கள் கோபத்தையாவது, பகையையாவது கொள்ளக்கூடாது. ஏனென்றால் கோபத்தினால் அதிக கெடுதல்கள் நேரிடும். ஜனங்கள் உங்களுக்கு விரோதமாயிருந்தாலும் நீங்கள் வெறுப்பு அடையாமலிருக்கப் பிரதிக்ஞை அதாவது மனோதிடஞ் செய்துகொள்ளுங்கள். நம்மெல்லோருக்கும் குருஸ்தானத்திலிருக்கிற ரிஷிகள் அளித்திருக்கிற வாக்கியத்தைக் கவனித்து மனதில் நன்றாய் அழுந்தும்படியாக முயற்சி செய்யுங்கள். அதாவது எல்லாரிடத்திலும் தெய்வீக குணங்களான சக்தியும் அன்பும் உள்ளன என்பதுதான். ஒவ்வொரு ரிஷியிடத்திலும் பிராமணனிடத்திலும் மாத்திரமல்ல, நாடார்கள், புலையர்கள், பறையர்கள் முதலிய ஒவ்வொருவரிடத்திலும் ஓரேவிதமாகக் கடவுளுடைய அம்சம் இருக்கிறதென்ப

தை நன்றாய் அறியுங்கள். ஆதலால் எல்லோரிடத்திலும் பிரசன்னமாயிருக்கிற கடவுளை மதியுங்கள். முதலில் உங்கள் ஒவ்வொருவருள்ளும் இருக்கிற கடவுளை ஆதரியுங்கள். எப்போதும் சுப வார்த்தையைப் பேசுங்கள். சுத்தமான ஆகாரங்களையும் பானங்களையும் அருந்துங்கள். எப்போதும் உங்களுடைய எண்ணங்கள் ஆனந்தகரமாயும் சுத்தமாயும் இருக்கட்டும்.

நீங்கள் செய்கிற காரியங்களெல்லாம் அன்பினால் பூரணமாயிருக்கட்டும். மகத்தான தெய்வம் உங்கள் எல்லாருடைய மூளையிலும் இருதயத்திலும் இருக்கிறார். நீங்கள் நாள்தோறுஞ்செய்யுங் காரியங்களில் அவர் காணப்படுவார். உங்களுக்குள்ளிருக்கிற தெய்வத்தை நீங்களறிந்து கொண்டு ஒவ்வொரு வாழ்நாளிலும் அந்த அன்பும் சக்தியும் இருப்பதை உணர்ந்தால் மற்றவர்கள் உங்களைக் குறித்து என்ன நினைத்தாலும் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. அவர்கள் தங்கள் கோயிலுக்குள் நீங்கள் பிரவேசிக்கக் கூடாதென்று சொன்னாலும் அதைப் பாராட்ட வேண்டாம். ஏனென்றால் உங்களுடைய இருதயத்திலேயே இந்திய தேசத்திலுள்ள கோயில்களுக்குள்ளெல்லாம் சிரேஷ்டமான கோயில் இருப்பதாகத் தெரிந்துக் கொள்ளுங்கள்.

இலங்கை வாசிகளாயிருந்த போதிலும் நீங்கள் இந்துக்கள் என்பதையும், மகா ரிஷிகளுடைய புத்திரர்களென்பதையும், இந்தியாவிலிருக்கிற உத்தமப்பொருள்கள் யாவும் நம் மெல்லோருக்கும் சொந்த மென்பதையும் மறவாதேயுங்கள். கல்வி யபிவிருத்தியாலும் எல்லா ஜனங்களுடைய நன்மைக்குப் பொதுவாய் உழைப்பதனாலும் இராஜாங்கச் சீர்திருத்தங்கள் செய்ய முயற்சிக்கிறதினாலும் நாங்கள் இந்தியா தேசத்தைப் பூர்வ காலத்திலிருந்த நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வர எல்லாப் பிரயத்தனங்களையும் செய்து கொண்டிருக்கிறோம். இந்த பிரயத்தனங்கள் மேல் ஜாதியாருக்கு மாத்திரமல்ல, பொதுவாக

எல்லா இந்தியர்களுக்குந்தான். நீங்களும் உங்களுடைய சந்ததியாரும் நல்ல வீடுகளில் வசிக்கவும், நன்ருய்க் கல்வி கற்கவும், கடவுளே வணங்க எல்லா கோயில்களுக்குந் தடையில்லாமல் சுயேச்சையாய்ப் போவதற்குந் தான் நாங்கள் உழைத்துக் கொண்டிருக்கிறோம். சீக்கிரமாகவே நல்லகாலம் வரப்போகிறது. அப்போது இந்தியாவில் ஜாதி பேதமில்லாமல் பொது நன்மைக்காக உழைக்கிறவர்கள் தான் மரியாதை செய்யப்படுவார்கள். புருஷர்கள் மாத்திரமல்ல, ஸ்திரீகளும் கௌரவம் அடைவார்கள்.

உங்களுக்கு விரோதமாயிருக்கிறவர்களிடம் பொறுமையாயிருங்கள். உங்கள் குழந்தைகள் பெரியவர்களானபோது அவர்கள் நிந்திக்கப் படாமலிருக்கும்படியான சீர்திருத்தங்களைச் செய்யப் பாடுபடுங்கள்.

பொது நன்மைக்காக நீங்கள் நன்ருய் வேலை செய்யுங்கள். எல்லோரிடத்திலும் அன்புள்ளவர்களாயிருங்கள். அப்படி நடந்து கொண்டால் பிராமணனையும் ஏனையோரையும் சமமாய் நோக்கும் கடவுளே உங்களுக்கு அனுக்கிரகம் செய்வாரென்பதில் சந்தேகமில்லை. அந்த அனுக்கிரகத்திற்கு நிகரானது உலகத்திலொன்றுமில்லை.

இலங்கை வாசிகளாகிய நீங்கள் இந்தியாவிலிருக்கிற எங்களை மறவாதேயுங்கள். இந்தியாவின் நன்மைக்காக உழைக்கிற நாங்கள் நீங்களிப்போது படுகிற கஷ்டங்களை மறக்கமாட்டோம். நீங்கள் அனுபவித்து வருகிற ஒவ்வொரு சங்கடங்களையும் நாங்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதாக உணர்ந்து அவைகளின் நிவாரணத்தின் பொருட்டு எங்களால் கூடியவரையில் சிரமப்பட்டு அவைகள் வேருடன் நாசமடைய முயற்சிக்கிறோம். அப்போது எல்லோரும் ஒரே கடவுளின் குழந்தைகளென்று உணரும்படி அவர் அனுக்கிரகிப்பார் என்பதிற் சந்தேகமில்லை.

உங்கள் சகோதரன்,

ஸி. ஜினராஜ தாசர்.

1918ஹு நவம்பர்மீ

குரு சிஷ்யலக்ஷணம்.

பார்வதிதேவி பகவானைப் பார்த்து கேட்கிருள்:- சுவாமி, சர்வலோக நாயகரே, சர்வஞ்ஞான பரமேசுவரனே, நிர்மலமான பிரபுவே, முதலில் குருவினிடமிருந்து மந்திரத்தை கிரகித்து பிறகு அதை ஜபிக்கவேண்டும் என்று சொல்லுகிறீர்கள். ஆனல் குருவானவர் எப்படி ருக்கவேண்டியது? சிஷ்யனுடைய லக்ஷணமென்ன? உபதேசத்தை எப்படி அறிகிறது? இவ்விஷயங்கள் எனக்குத் தெரியவேண்டும். அவைகளை தாங்கள் சொல்லவேண்டும்.

பகவான் சொல்லுகிருர்:—பார்வதி, சகல மார்க்கங்களுக்கும் மூலகாரணத்தைக் காட்டும் இந்த கேள்வியை கேட்டாய். இது உத்தமமான கேள்வி. நான் இவ்விஷயத்தை ஸவிஸ்தாரமாய்ச்சொல்லுகிறேன். கவனமாய்க் கேள்.

குரு லக்ஷணம்.

இவர் பரப்பிரம்ம ஸ்வரூபத்தைத் தியானிக்கிறவர். சாந்தமாயிருக்கிறவர், நிஜத்தையே பேசுகிறவர். அகங்காரமற்றவர், கர்வமற்றவர், காமக்குரோதம் முதலிய குணங்களில்லாதவர், ஸ்திரீ சங்கமில்லாதவர், சகல ஆகம சாஸ்திரங்களையும் பார்த்திருக்கிறவர், உத்தமமான வசனங்களையே உச்சரிக்கிறவர், கம்பீரமாயிருக்கிறவர், எப்போதும் சந்தோஷத்துடன் இருக்கிறவர், பெரிய விஷயங்களையே விசாரிக்கிறவர், தயையுடையவர், வேதங்களையும் வேதாங்கங்களையும் அத்தியயனம் செய்திருக்கிறவர், சகல ஸ்மிருதி சாஸ்திரங்களையும் அறிந்திருக்கிறவர் புராணங்களின் தத்துவங்களை வெளியாக்குகிறவர், மந்திர சாஸ்திரங்களை அப்பியசித்திருக்கிறவர், யந்திரங்களை ஸ்தாபிக்கும் விதங்களை அறிந்திருக்கிறவர், ஈசுவரனிடத்தில் பக்தியுள்ளவர், ஈசுவரனை தியானிக்கிறவர், குருவினிடத்தில் பக்தியுடையவர், குருவினிடம் ப்ரீதியுடையவர், பெரி

யோர்களால் சொல்லிய மார்க்கங்களை அறிந்திருக்கிறவர் எப்போதும் பக்தர்களிடம் பிரியமுள்ளவர், எல்லாரிடத்திலும் சமதிருஷ்டியுள்ளவர், இப்படிப்பட்ட சகல குண சம்பன்னராயிருக்கிறவர் தான் குருவென்று சொல்லப் படுகிறார்.

சிஷ்ய லக்ஷணம்.

நிர்மலமான சுவபாவத்தையுடையவன், தர்மபுத்தியுள்ளவன், நிஜத்தையே பாராட்டுகிறவன், இந்திரியங்களை ஜயித்தவன், அகங்காரமற்றவன், பிரியம் துவேஷம் இவைகளற்ற குருவினிடத்தில் பக்தியுள்ளவன், கோபமற்றவன் குருவின் இச்சையை நிறைவேற்றுகிறவன். விஷயங்களில் பற்றுதல் அடையாதவன், எட்டு மதங்களினின்றும் விடு பட்டவன், தான் எந்த கதியை அடையவேண்டுமோ அதையே இரவும் பகலும் தியானிக்கிறவன், இப்படிப்பட்ட சிஷ்யனை குருவானவர் தயையுடன் பரீக்ஷித்து அவனுடைய மனது எப்படி நிர்மலமாகுமோ அப்படி சிக்ஷிக்கவேண்டியது. பிறகு அவனுக்கு உபதேசம் செய்யவேண்டியது.

உபதேசம் பெற்றபின் அதை சிஷ்யன் அனுபவத்திற்குக் கொண்டு வரவேண்டியது. குருவின் வசனத்தை ஒரு நாளும் மீறி நடக்கக்கூடாது. குருவின் பாதாரவிந்தங்களில் தன் மனதைச்செலுத்தி, தன்னுடைய சரீரம், திரவியம், பிராணன், சகலத்தையும் அவருக்கே அர்ப்பணம் செய்யவேண்டும்.

கேனோபநிஷத்தின் கடைசியில் சிஷ்யன் மனோநிக்கிரகம், இந்திரியநிக்கிரகம், அக்கினி ஹோத்திராதிகர்மங்கள் வேதாப்பியாசம், சத்தியம் முதலியவைகளை பிரம்மவித்தையை கிரகிக்கும் பொருட்டு அவலம்பிக்கவேண்டியது என்று சொல்லியதையும் கவனிக்கவேண்டும்.

பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்.)

37-வது அத்தியாயம்.

நூதன சரீரங்களில் ஜீவனுடைய வாழ்க்கை (தொடர்ச்சி.)

முந்தின அத்தியாயங்களில் நாம் வாசித்துக் கற்றுக் கொண்டவைகளிலிருந்து நம்முடைய நூதன சரீரங்கள் நம் குறைவுகளுக்கும் சக்திகளுக்கும் வெற்றிகளுக்கும் காரணமல்லவென்றும், ஆனால் நம் குறைவுகள் சக்திகள் வெற்றிகளின் பலன்களாக அச்சரீரங்கள் இருக்கின்றனவென்றும் அறியலாம். இவ்விஷயத்தில் தான் பிரஹ்மக்ஞான சங்கததார்களாகிய நமக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் ஏற்படுகிறது.

இவ்வித சம்பவங்களுக்கு முகாந்திரம் பிரஹ்மக்ஞானத்தில் சொல்லியிருக்கிறது. இது அதிக திருப்தியாயிருப்பது போல இதர கொள்கைகள் திருப்தியைக் கொடுக்கவில்லை. உனக்கு கெட்ட குணமுள்ள குரூரமான மூடத்தனமான பெற்றோர்களும் உனக்கு ஒத்துமையில்லா சுயநயம் பாராட்டுகிற சகோதரர்களும் சகோதரிகளும் வாய்த்தால் இந்தக் குறைக்கு உன்னைத் தவிர வேறேயொருவரும் காரணமாகமாட்டார்களென்று பிரஹ்மக்ஞானம உண்மையாய் உரைக்கின்றது. ஏனெனில் கர்ம விதிப்படி நீ அவர்களைச் சேர்ந்தவனாயிருக்கிறாய் முன் ஜன்மங்களில் நீ செய்த சில காரியங்களினால் உனக்கும் அவர்களுக்கும் இரத்த சம்பந்தம் பேற்பட்டிருக்கிறது.

ஒருவன் ஒரு குடும்பத்தில் ஒரு தகப்பனுக்கும் தாய்க்கும் மகனாகப் பிறக்கிறான். அத்தாய் தகப்பனுக்கும் அம்மகனுக்கும் பலவிதங்களில் ஒற்றுமையிருக்கிறது. அந்தக் குடும்பத்தில் அம்மகன் பிறந்ததால் அந்த ஒற்றுமைகளிருக்கின்றனவென்பது சரியான முகாந்திரமல்ல. ஆனால் அந்த

மகனாகிற ஜீவன் அவன் தாய் தகப்பனாகயிருப்பவர்களைப் போன்ற சில குணங்களை உடையவனாக இருப்பதால் தான் அந்த குடும்பத்தில் அவர்களுக்கு மகனாய்ப் பிறந்தான் என்பது தான் சரியான முகாந்தரம்.

நீ முன் ஜன்மத்தில் யோக பிரஷ்டனாயிருந்தால் அடுத்த ஜன்மத்தில் உத்தமமான குடும்பத்தில் வந்து பிறந்து முன் விட்டுப் பான யோகத்தை பூர்த்தி செய்வாயென்று பகவத்கீதையில் சொல்லியிருக்கிறபடி நீ இந்த ஜன்மத்தில் உததமமான குடும்பத்தில் பிறந்திருந்தால் அந்தப் பதவியை நீயே சம்பாதித்தவனாயிருக்கிறாய்.

நீ ஜனிததிருக்கிற குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் உனக்கும் ஸ்தூல சரீரங்களின் அமைப்புகள் ஒரே மாதிரியாயிருந்தாலும் நடவடிக்கைகளிலும் குணத்திலும் உனக்கும் மற்றவர்களுக்கும் கொஞ்சம் கூட ஒற்றுமையில்லாமலிருக்கலாம். அப்படியிருந்தால் அனேக ஜன்மங்களுக்கு முன் நீ கெட்ட செய்கைகள் இச்சைகள் எண்ணங்களுடன் கூடினவனாயிருந்து அடுத்த ஜன்மங்களில் நீ அவைகளை சீர்திருத்தம் செய்து இந்த ஜன்மத்தில் அவைகள் உன்னை விட்டு விலகியிருந்தாலும் கூட அவைகளின் கர்ம பலன்கள் உன்னைத் துயர்ந்து வந்து இந்த ஜன்மத்தில் அவைகளை நீ யனுபவித்துத் தொலைப்பதற்காக இந்தக் குடும்பத்தில் பிறந்திருக்கிறு யென்று அறி, கொஞ்ச காலம் வரை உனக்கும் அந்தக் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் ஸ்தூல சரீரத்தில் ஒற்றுமையிருந்த போதிலும் கூட உன்னுடைய நடத்தையினாலும் குணத்தினாலும் உன்னைச் சேரும் சிநேகிதர்களாலும் உன் தொழில், படிப்பு முதலானவைகளாலும் உன் உருவமே மாறும். உன் தொனியே வேறுபடும்—அக்குடும்பத்தைச் சேராதவன் போலவே கொஞ்ச காலத்தில் ஆவாய். நீ யோக்கிதையுள்ள குடும்பத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பாக இருக்கலாம். அயோக்கியமான குடும்பத்திற் பிறந்த அன்னபட்சியாயிருக்கலாம்.

நீ எப்படிப் பிறந்தாலென்ன, எவ்விடத்தில் பிறந்தாலென்ன, உன்னுடைய ஸ்தூல சரீரம், இச்சா சரீரம், மானச சரீரங்கள் எவ்விதமிருந்தாலென்ன, உன் சித்தவிருத்தியாலும் நடத்தையாலும் முப்பது வயதாகுமுன் அச்சரீரங்களை நீ வேறு விதமாய் மாற்றி விடலாம். உன்னைப் பார்ப்பவர்கள் நீ முந்தின மனுஷன் தானோ வேறொருவனோவென்று சந்தேகிப்பார்கள்.

சிலர் அவலக்ஷணமுள்ள சரீரங்களுடனிருந்தாலும் நல்ல ஸ்வபாவமுள்ளவர்களாயிருப்பதால் ஜனங்கள் அவலக்ஷண சரீரங்களைப் பாராட்டாமல் அவர்களை நேசிக்கிறார்கள். வேறு சிலர் லக்ஷணமான சரீரங்களுடனிருந்தாலும் கெட்ட ஸ்வபாவமுள்ளவர்களாயிருப்பதால் ஜனங்கள் அவர்களை வெறுக்கிறார்கள்.

38-வது அத்தியாயம்.

நூதன சரீரங்களில் ஜீவனுடைய வாழ்க்கை:—தொடர்ச்சி

அடுத்த ஜன்மத்தில் அழகான சௌக்கியமுள்ள ஸ்தூல சரீரம் உனக்கு வாய்க்கவேண்டுமானால் இப்போதுள்ள உன் ஸ்தூல சரீரத்துக்கு ஏராளமான சரீரப் பயிற்சியும், சுத்தமான காற்றும், வேண்டிய ஓய்வும், அதாவது சிரமபரிகாரமும் கொடுக்கவேண்டும் அதற்கு மட்டுக்கு மிஞ்சாத போதுமான சுத்த ஆகாரத்தையும் பானத்தையும் கொடுக்கவேண்டும்.

காமக்குரோதாதிகளை யடக்கி நல்ல இச்சைகளை விருத்தி செய்ததின் பலனாக அழகுள்ள சேர்த்தியான இச்சா சரீரம் உண்டாகிறதென்று நீ யறியவேண்டும். நன்றாய் அடக்கப்பட்ட இச்சா சரீரமானது ஸ்தூல சரீரத்தை

அமைதியாயும் சாந்தமாயும் சந்தோஷமாயும் இருக்கும்படி உதவும், அப்போது முகமானது தளர்ந்து கிழண்டுவாடின உருவத்தை யடைய மாட்டாது,

மகாத்மாக்களும் யோகிகளும் எப்போதும் பாலியமாகவே காணப்படுவார்கள். ஏனெனில், அவர்களுடைய இச்சைகள் பலாத்காரமாய் அவர்களை இழுத்துச் செல்லமாட்டா. அவர்களுடைய இச்சா சரீரங்களில் ஆபாசமான காமக்குரோதாதிகள் இல்லை.

நல்ல திருத்தமுள்ள மானச சரீரமானது நேர்த்தியான சுத்தமுள்ள மேன்மையான எண்ணங்களினாலும் சிரமப்பட்டுக்கற்கும் கல்வியாலும் உண்டாகிறது. அது இச்சா சரீரத்தையும் ஸ்தூல சரீரத்தையும் தாக்கியும் அவைகளால் தாக்கப்பட்டும் அவைகளை சமாசப் படுத்தி அச்சரீரங்களைத் தரித்துக்கொண்டிருக்கும் மனிதனை இவ்வுலகத்தில் உன்னதமான பதவியை அடையத் தகுதியுள்ளவனாகச் செய்யும்.

இவ்விதமாய் ஒரு ஜீவ தசையில் ஒருவன் கௌரதையுள்ள பதவியை அடைந்து அதில் ஸ்திரமாயிருக்கவேண்டுமானல் அவன் அதற்குத் தகுதியாயிருக்கவேண்டியது அவசியம். அப்படித் தகுதியாயிருப்பதற்கு ஏற்ற சரீரங்கள் இருக்கவேண்டியதும் அவசியமாகின்றது.

ஒருவனுக்குப் பரும்படியானதும் அடக்கமுடியாததுமான இச்சா சரீரம் இருந்தால் அவன் வாழ்நாள் சந்தோஷமாகவாவது சமாதானமாகவாவது இருக்கமாட்டாது நல்ல மானச சரீரத்தையுடையவனாகவும் தன் எண்ணங்களை அடக்கக் கூடியவனாகவும் ஒருவன் இருந்தாலொழிய நுட்பமான அறிவை உபயோகிக்கவேண்டிய மேலான பதவிக்கு அவன் தகுதியாக மாட்டான். அவனுடைய மானச சரீரமும் இச்சா சரீரமும் எவ்வளவு நல்லதாயிருந்த போதிலும் ஸ்தூல சரீரம் நோயுள்ளதாயிருந்தால் அவனுடைய

மானச சக்தியையும் இச்சா சக்தியையும் வெளிப்படுத்த முடியாமலும் அவனுடைய உபயோகத்தை முற்றிலும் தடுத்து அவனை ஜீவகாலமெல்லாம் துர்ப்பாக்கியனாகவும் யாதொரு வேலையையும் செய்யமுடியாதவனாகவும் ஆக்கும்.

இவைகளை எல்லாம் நாம் நம்பினால் அந்தப்படி நாம் நடப்போம். நமக்கு நேரும் சம்பவங்களைத் திருப்தியுடன் அங்கீகரிப்போம். அவைகள் நமக்குப் பிரியமில்லாதவைகளாயிருந்தால், அவைகளை மாற்றவும், பிரியமுள்ளவைகளாயிருந்தால் அவைகளை விருத்தி செய்யவும் நம்மால் முடியுமென்று அறிவோம். நூதன சரீரங்களில் நம்முடைய வாழ்க்கையானது குற்றமுள்ளதாயிருந்தால் அவைகளை சீர்திருத்த வேண்டியிருக்கிறதென்றும், குற்றமற்றதாயிருந்தால் பூர்த்தியாய்க்கற்றுக் கொண்டிருக்கிறோமென்றும் அறிவதினாலே அவ்வாழ்க்கையானது ஆனந்தமாயிருக்கும்.

உன்னுடைய இச்சா சக்தியானது ஈசுவரனுடைய இச்சா சக்தியின் ஓர் பாகமாவிருக்கிறது. இதை நீயறிந்து இதில் உனக்கு நிச்சய ஞானமேற்பட்டால் அடுத்த ஜன்மங்களில் உன் சரீரங்களையும் ஜீவனத்தையும் உன்னிஷ்டப்படி அமைக்கலாம். இந்த அறிவு அல்லது சக்தியை குழந்தைகள் கூட உபயோகிக்கலாம். இதற்காகத் தாங்கள் பெரிய மனிதர்களாகவும் ஸ்திரீகளாகவும் ஆகும் வரை காத்திருக்கவேண்டாம். ஏனெனில், அனேக குழந்தைகள் இளமையான நூதன சரீரங்களிலிருந்தாலும் முதிர்ந்த விவேகமுள்ள ஜீவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சரீரங்களை அடக்கி உபயோகித்து வரும் விதத்தினாலே ஜீவனுடைய முதிர்ந்த பக்குவத்தை நாமறியலாம்.

வி. வெங்குசாமி ஐயர்.

தர்மம்.

தருமமே யுலகம் போற்றச் சகல காரணமதாகுந்
தருமமே யழியா தென்றுந் தாபகமாகி நிற்குந்
தருமமே தனைவேட்டோர்க்குச் சௌக்கியமனைத்து நல்குந்
தருமமே முக்தி சேருஞ் சாதனமென் றுட்கொள்வான்.

நாம், இவ்வுலகின் கண் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்தாவரஜங்கமப் பொருள் யாவும் மாயையென்றும், தோற்றமேயொழிய நித்தியமன்றென்றும், அறிவோம். ஆதலின் அநித்திய வஸ்துவை விட்டு நித்திய வஸ்துவை விரும்பாதார் யாவர்? நித்திய வஸ்துவே மோக்ஷமாகும். அம்மோக்ஷத்தை யடைவதற்கு அநேக சாதனங்களிருப்பினும் அவற்றுள் தருமமே முதன்மையாகும். தர்மம் என்பது என்ன? அதனை எவ்விதம் செய்கிறது? அதனால் எவ்விதம் மோக்ஷமடையலாம்? என்பவை போன்ற பல கேள்விகள் உண்டாகலாம். "ஈதல் அறம்." அதாவது கூன், குருடு, செவிடு முதலிய அங்கஹீனர்களுக்கும் சம்பாதிக்கத் திறமை யற்றவர்களுக்கும் உலகைத் துறந்தவர்களுக்கும் மற்ற தரித்திரர்களுக்கும் அவரவர்க்குத் தேவையான பொருள்களைக் கொடுப்பதே அறமாகும்.

"வறியார்க் கொன்றீவதே யீகைமற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து" எனப்பொய்யாமொழிப் புலவர் கூறினபடி, உண்மையான கொடையென்பது கொள்வாரிடம் எவ்விதப் பயனுங் கருதாது தம்முள்ளத் தெழுந்த கருணைமேலிட்டு காலமிடமாதிய ஒன்றுங் குறியாது பிறர்க்கு உதவுவதேயாம். இக்கருத்தையே மணிமேகலையில்

"இம்மைச் செய்தது மறுமைக்காமெனும்
அறவிலை வாணிகன் ஆஅய் அல்லன்
பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப்பட்டன்று அவன் கைவ்வண்மையே"

என்னுஞ் செய்யுள் நன்குணர்த்தும்.

முற்றொடர் பிற்செய்த முறைமையால் வந்த
மற்றை நாட் பெற்றோமென் றெண்ணாது பாழ்மனமே"

என்றும் பெரியோர் வாக்கிற் கிணங்கத் தருமம் செய்தவர்களைத் தானே பொருள் வந்தடையும். இல்லறத்தான் செய்வதற்குரிய முக்கிய தருமங்கள் துறவிகளுக்கும் ஆதுரர்களுக்கும் வறுமைப்பட்டவர்களுக்கும் பிதிரர்களுக்கும் தெய்வங்களுக்கும் தேவர்களுக்கும் விருந்தினர்க்கும் உதவியாய் நிற்றலும், உணவு முதலியவை கொடுத்தலுமாம். மற்றுமுள்ள தருமங்கள் யாதெனின் (1) ஆதுலர்க்குச் சாலை (2) ஓதுவார்க்குணவு (3) அறுசமயத்தார்க்குண்டி (4) பசுவிற்கு வாயுறை (5) சிறைச் சோறு (7) ஐயம் (8) தின்பண்டநல்கல் (8) அறவைச் சோறு (9) மகப் பெறுவித்தல் (10) மகவுவளர்த்தல் (11) மகப்பால் வார்த்தல் (12) அறவைப் பிணஞ் சுடுதல் (13) அறவைத் தூரியம் (14) சுண்ணம் (15) நோய்மருந்து (16) வண்ணார் (17) நாவிதர் (18) கண்ணாடி (19) காதோலை (20) கண்மருந்து (21) தலைக்கெண்ணை இவைகளை ஏழைகளுக்கு உதவச் செய்தல். (22)……… (23) பிறர் துயர்காத்தல் (24) தண்ணீர்ப் பந்தல் (25) மடம் (26) குளம் (27) சோலை (28) ஆவிறிஞ்சுதறி (29) விலங்கிற் குணவு (30) ஏறுவிடுத்தல் (31) விலை கொடுத்துயிர் காத்தல் (32) கன்னிகாதானம் முதலியவையாம்.

அறத்தை இன்னவிதம் செய்வேண்டுமெனின்

"இன் சொல் விளைநிலனா வீதலேவித்தாக
வன் சொற் களை கட்டு வாய்மை எருவட்டி
அன்பு நீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

என்னும் செய்யுளிற் கூறியபடி, இனிய சொல்லே விளை நிலமாகவும், இரப்பவர்க்கீதலே விதையாகவும், கடினச் சொற்களாகிய களையைப் பிடுங்கி எறிந்து மெய்மையாகிய எருவையிட்டு அன்பாகிய நீரைப்பாய்ச்சி, அறமாகிய கதிரை விடும்படி ஒப்பற்ற பயிரை இளமை முதற் செய்யவேண்டும், இங்குச் சிறு காலையென்பது உபலக்ஷணம். தருமத்திற்

சிறந்த செல்வமில்லை. அதனை மறப்பதிலுங் கேடில்லை தரும சிந்தையுடன் பல்லுயிர்க்கும் அருளைச் செய்யின் அந்நல் வினை, பறவையும் நிழலும் விடாது நிற்பது போல் அவ்வுயிரை விடாது நின்று, விரும்பு மனைவற்றையும் காமதேனுவைப்போல் கொடுக்கும். செல்வமானது நல்வினை சேர்ந்த காலத்திற் சேர்ந்து அது அழியுங் காலத்தில் எவ்வளவு உறுதியாய்ப் பிடித்தாலும் நிற்காதாகையால் செல்வமிருக்கும் பொழுதே வறுமையால் வருந்தித் தன்னிடம் வருபவருடைய இன்னல்களைத் தீர்க்கவேண்டும். யாசித்தால் இல்லையென்று மறுக்காமலும் இவன் உறவினன் இவன் நண்பன் என வரையறைசெய்யாமலும் வறுமைப்பட்டவர்களுக்குத் தனக்கியைந்த வளவு கொடுக்கவேண்டும். அதுதான் கொடையாகும். கைம்மாறு செய்பவனுக்குக் கொடுப்பது தருமமாகாது. கூலிவேலை செய்து அதனால் வருவது சொற்பச் செல்வமேயாயினும் அதற்கியன்றவாறு நல்வினையாகிய தருமஞ் செய்தலே நன்று. அவ்வாறு செய்யுந் தருமத்தை இன்று, நாளை, பிறகுபார்த்துக்கொள்ளுவோம், இவ்விளவயதில் நாம் தருமம் செய்து என்ன பலனையனுபவிக்கப் போகிறோமென நினைத்தல் கூடாது. இக்கருத்துகளை யுணர்த்தும் செய்யுட்கள் பின்வருவன

"அறத்தினூங் காக்கமு மில்லை யதனை
மறத்தி னூங்கில்லை கேடு"—திருவள்ளுவர்

"அறவிய மனத்தராகி யாருயிர்க் கருளைச் செய்யிற்
பறவையு நிழலும் போலப் பழவினை யுயிரோடாடி
மறவியொன் றானுமின்றி மனத்ததே சுரக்கும் பால
கறவையிற் கறக்குந் தம்மாற் காமுறப்பட்ட வெல்லாம்"

(சீவகசிந்தாமணி முத்தி. 279 செய்யுள்)

"நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத் தான்றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக்கால்" (நாலடியார்.)

"எற்றகை மாற்றாமை யென்னானுந் தாம் வரையா
தாற்றாதார்க் கீவதா மாண் கடன்—ஆற்றின்
மலிகடற் றண் சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து"—நாலடியார்.

"செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி"—குறள்

தமிழ் நூலார் இக்கொடையைப் பலவாறாகக் கூறுகின்றனர். ஒருவனுக்குத் தான் ஏதேனும் உதவி செய்யக்கூடுமாயின் தானே முற்பட்டுவந்து செய்தல், தலைக்கொடை யென்றும், அதனைப் பெறுவான் வந்து கேட்ட பின் கொடுத்தல் இடைக்கொடை யெனவும், பெறுவார் கேட்ட பின் பல காலலைத்துப் பின்னர்க் கொடுப்பது கடைக் கொடையென்றுங் கூறுவர். இதனையே முறையே சாத்துவிகதானமென்றும், இராஜஸதான மென்றும், தாமஸதானமென்றும் கூறுவார் ஓர் சாரார்.

மானிடராகப் பிறந்த எவரும் புகழ் அடையவேண்டும். புகழ் பெறாதவர் பிறவாதிருத்தலே நலம். இக்கருத்தை நாயனார்—"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்றும் குறளால் தெரிவித்திருக்கின்றார். கீர்த்தி அடைய வேண்டுமென்று கஷ்டப்பட்டுப் பெற்ற பின் அதைப் போல பிரயோஜனமுள்ளது வேறொன்றுமில்லை. அநேக மனிதர்கள் உலகில் தங்கள் பெயர் யாவருக்கும் தெரியவேண்டுமென்று பிரயாசைப் படுகின்றனர். உதாரணமாக வாலேஸ் என்னும் பரோபகாரி பாரிஸ் நகரத்தில் ஆயிரக் கணக்கான ஊற்றுகள் ஜனங்களுடைய பிரயோஜனத்திற்காகவே தோண்டினார். அவ்வூற்றுகளெல்லாம் இன்றைக்கும் வாலேஸ் ஊற்றுகள் என்று அழைக்கப் படுகின்றன.

நல்ல உபகாரம் செய்பவர்களும் ஒன்பது ரஸங்களும் சேர்ந்து கவிபாடுகின்றவர்களும் சுகமாய்வாழ்க. அவர்களுக்கேற்பட்ட புகழ் என்னும் உடலுக்கு மூப்பு, இறப்பு என்னும்

பயன்களில்லை எனப் பார்த்திருஷரியும், கூறியிருக்கின்றார். கொடையே புகழ் பயக்குமென்பதைத் தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியலுள் (சூ-உக) "இடையில் வண் புகழ்க் கொடைமை" எனக் கூறுதலினால் இனிது விளங்கும். ஆதலின் புகழைப் பெறுவதற்கு தருமம் முக்கியமாயிருக்கின்றமையால் அதனை யாவரும் விரும்பவேண்டுவதவசியம். ஸ்மிருதி கர்த்தாவாகிய மனுவும் "பிராணி பிறக்கும்பொழுது ஒன்றாகவே தான் பிறக்கிறது, இறக்கும்போதும் தான் ஒன்றாகவே போகிறது புண்ணிய பாவத்தையும் ஒன்றாகவே அநுபவிக்கின்றது. அன்னை முதலியவர்களின் சுகதுக்கம் இவனுக்கு வராது. பூமியில் இவனிறந்த பின்பு விறகு, மண், கட்டி, இவைகள் போன்ற உடலைவிட்டு விட்டு இவன் உறவினர்கள் போய்விடுகின்றனர். தருமம் மட்டும் அவனைப்பின் தொடருகின்றது. ஆகையினால் தருமத்தினால் நரகாதி துக்கங்களைத் தாண்டக் கூடுமாகையினால், அத்தருமத்தைத் தனக்குச் சகாயத்துக்காக நாடோறுங் கொஞ்சங்கொஞ்சமாய்ச் செய்யவேண்டியது" எனக் கூறியுள்ளார். திருமால் குறளுருவெடுத்து இரந்தபோது அவ்வஞ்சச் செய்தியை வெள்ளி கூறித்தடுத்துங்கொள்ளாது தத்தஞ்செய்த மாவலி வேந்தனது ஈகையும், குமணன் தன்தலையைக் கொடுக்கத்துணிந்ததும், ததீசி முனிவர் தனது முதுகெலும்பைக் கொடுத்து நின்றதும், சிபிச்சக்கிரவர்த்தி பறவைக்காகத் தன் மாமிசத்தைக் கொடுத்ததும், கர்ணன் தான் செய்த புண்ணிய மனைத்தையும் போர்க்களத்தில் யாசித்த வந்தணனுக்குக் கொடுத்ததும், கர்ணன் தனது கவசத்தை இந்திரனுக்குக் கொடுத்ததும் இன்னும்பல இதிகாசங்களும் தருமமே பெரிதெனக் கூறுகின்றன.

எம். எம். நாராயணசாமி ஐயர்,

முடிகொண்டான்.

(தொடரும்)

அமிர்தார்ணவ லேகியம்,

இந்த லேகியம் ரத்தத்தைசுத்தி செய்து விருத்தியாக்கி, நரம்பு ஸ்தானங்களை எல்லாம் பலப்படுத்தி, தேகச்சூடு, பித்தவாயு, கைகால் கண் எரிச்சல், இவைகளைச் சமனஞ்செய்து, மூளையைக் குளிரப்பண்ணி, தேக பலத்தையும் மேனியையும் உண்டாக்குகின்றது. மேலும் இம்மருந்து நாள்பட்ட க்ஷயம், கிரஹணி, நீடித்த தலைநோய், மார்புவலி முதலிய வியாதிகளையும் கண்டிக்கின்றது. எவ்வித பத்தியமுங் கிடையாது.

20 தோலா கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2—0—0

எங்கள் கியாட்லாக் இனமாய் அனுப்படும்.

இனிமையானது ! பரிமளமிகுந்தது !

மணி ஆயில்.

முப்பத்தைந்து வருஷகாலமாய் விற்பனையாகி வருகிறது.

இந்தக் கூந்தல் தைலம் சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது. அலங்காரத்துக்கு யோக்கியமான மனோகரமான சுகந்தமுள்ளது சிரசில் உபயோகித்து வந்தால் ரோமங்களை உதிராமற் றடுத்து நீண்டு அடர்த்தியாய் வளரும்படி செய்கிறது தற்காலம் வெளிவந்துலாவும் தைலங்களைப்போல் கருதிவிடக்கூடாது. ஒரு தடவையாவது வாங்கி உபயோகித்து உண்மையையறியுங்கள். சிரசுக்குத் தடவுவதனால் மூளைக்கு குளிர்ச்சியை யுண்டுபண்ணக்கூடியது. இது ஒன்றுதான். புட்டி 1-க்கு ரூ 1. ஐந்து புட்டி ஒரு தடவையில் வாங்கினால் விலை ரூ 4. வி. பி. செலவு பிரத்தியேகம். இன்னும் விபரம் வேண்டுமேவார் எங்கள் கியாட்லாக்குக்கு எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்,

45–மேலகோபுரவீதி

மதுரை

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறி வந்தவன் களிப்புடன் செல்வான்!"
"விஷம் தீண்டினவன் நிமிஷத்தில் குணமடைவான்!"
குணமில்லாவிட்டால் ரூ. 100 இனும் கொடுக்கப்படும்.

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப் பற்றி, நாம் அதிகக் கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டு பிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியைத் தேள்கொட்டின விடத்தில் உபயோகித்த உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச் செய்யும். இவ் விஷ சஞ்சீவியை இன்னும் எலி; நாய், பூரான் செய்யான், பாம்பு, நண்டுத்தெறுக்கால் முதலிய எவ்வித விஷ ஜந்துக்கள் தீண்டினாலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம். மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில், பணம் வாபஸ் செய்து விடப்படும்.

இந்த சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ் விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது. ஏனென்றால், மனிதனை இரவில் 12மணிக்கு நித்திரையில் விஷந் தீண்டி விட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைபடி அநேகமருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன் படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை பாக்கட் 1-க்கு 0—8—0
டசன் 1-க்கு 5—0—0

விலாசம்

வி. ஏ. எஸ். பாணி,
நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.